## 5. உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட குழு அறிக்கைகள்

⌘ ⌘ ⌘

### குழு 1: ஊராட்சி ஒன்றியங்களுக்கான அதிகார ஒப்படைப்பு பற்றிய ஆலோசனை குழுவின் அறிக்கை

#### ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம்

1. ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் பணிகளில் ஆரம்பப் பள்ளிக் கட்டிடம், ஊராட்சி ஒன்றியச் சாலைகள், சத்துணவு மையக் கட்டிடம், தாய், சேய் நலவிடுதி, சிறுபாசன ஏரிகள் போன்ற பணிகள் ஊராட்சி ஒன்றியம் மூலம் தான் செய்யப்பட வேண்டும். பல பணிகளை ஊராட்சி ஒன்றியத்தின் மேற்பார்வையில் ஊராட்சி செய்யவேண்டும். கழிவுநீர்க் கால்வாய் போன்ற பெரிய பணிகளை ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் செய்ய அனுமதிக்க வேண்டும். ஊராட்சி ஒன்றியத்தின் பங்கு 15% என உள்ளதை 40% ஆக உயர்த்த பரிந்துரை செய்கிறது.

#### இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம்

2. தொகுப்பு வீடுகள் கட்ட நிர்ணயித்துள்ள மதிப்பீட்டுத் தொகை உயர்த்திக் கொடுக்க வேண்டும். இவ்வாறு கொடுக்கப்படும் போது அந்தந்த மாவட்டத்தில் குவாரியில் இருந்து உள்ள தூரத்திற்கு ஏற்ப மதிப்பீடு தயாரித்து அதற்கேற்ப நிதி வழங்க வேண்டும்.

3. தொகுப்பு வீடுகளுக்கான பயனாளிகள் தேர்வினை ஊராட்சி ஒன்றியக் குழுவின் மூலம் தேர்வு செய்ய வேண்டும்.

4. இந்த தொகுப்பு வீடுகள் கட்டுவதை பயனாளிகளிடம் ஒப்படைக்க வேண்டும். பயனாளிகள் முன்வராதபட்சத்தில் ஊராட்சி ஒன்றியம் சம்மந்தப்பட்ட குழு மூலம் செய்ய வேண்டும்.

5. முந்தைய ஆண்டுகளில் கட்டி முடித்து இடிந்த மற்றும் இடியும் தருவாயில் உள்ள வீடுகளை அதே இடத்தில் அதே பயனாளிகளுக்கு புதியதாக ஒரு வீடு கட்டிக்கொடுக்க இக்குழு பரிந்துரை செய்கிறது.

#### மில்லியன் கிணறு திட்டம்

6. ஜீவன்தாரா கிணறுகளில் பயனாளிகள் தேர்வை ஊராட்சி ஒன்றியம் குழு மூலம் செய்ய வேண்டும்.

7. பாசன ஏரிகள் போன்ற மற்ற பணிகளையும் ஊராட்சி ஒன்றியம் மூலம் செய்ய அனுமதிக்க வேண்டும்.

#### ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

8. இதில் பயனாளிகள் தேர்வு செய்யும் பணியின், ஊராட்சி ஒன்றியத் தலைவர், கிராமங்களில் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்தின் வார்டு உறுப்பினர், சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றத்தலைவர், வட்டார வளர்ச்சி அலுவலர், வங்கி அலுவலர் ஆகியோரைக் கொண்ட குழுதான் இறுதி செய்யவேண்டும் என பரிந்துரை செய்கிறது.

#### கிராமப்புற இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டம்

9. இதில் பயனாளிகள் தேர்வுக் குழுவில் ஊராட்சி ஒன்றியத் தலைவர் தலைமையில் நடைபெற வழிவகை செய்யவேண்டும்.

10. பயிற்சியில் பங்குபெறும் பயனாளிகளில் ஊக்கத் தொகையை தாமதமின்றி உடனுக்குடன் வழங்க வேண்டும் என பரிந்துரை செய்கிறது.

11. பயிற்சி முடித்த பயனாளிகளுக்கு உடன் வேலைவாய்ப்புக்கான வழி வகை செய்ய வங்கிகள் மூலம் கடன் தொகை வழங்கவேண்டும்.

### மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்

12. இத்திட்டத்தில் வழங்கப்படும் சுழற்சி நிதியில் கடன்பெறும் பயனாளிகளுக்கு, திரும்ப வழங்கும்போது மான்யத்துடன் திரும்பச் செலுத்த பரிந்துரை செய்ய வேண்டும்.

13. இந்திரா நினைவுக் குடியிருப்பு மற்றும் மில்லியன் கிணறுத்திட்டம் இவைகளில் மின்னிணைப்பு வழங்குவதில் தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கு உள்ள முன்னுரிமை போன்ற பிற்பட்ட இனத்தவருக்கும் முன்னுரிமை வழங்க வேண்டும்.

### தேசிய கரிம வாயு மேம்பாட்டுத் திட்டம்

14. இத்திட்டத்தில் 3 கன மீட்டர் கொள்ளவு உள்ள கலன்களுக்கு மட்டும் மான்யம் வழங்கப்படுகிறது. இதனை மாற்றி 3 கன மீட்டருக்கும் மேல் உள்ள கலன்களுக்கும் மான்யம் வழங்க வேண்டும் என பரிந்துரை செய்யப்படுகிறது.

### பொது பரிந்துரைகள்

1. ஊராட்சிகளுக்கான நிதிக்குழு மாநில அளவில் தொடர்ந்து நிரந்தரமாக இயங்க வேண்டும்.

2. ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர்களுக்கு ரூ.1500/- கௌரவ ஊதியமாக்க வேண்டும்.

3. ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர்களுக்கு தனியாக வாகன வசதி செய்து தர வேண்டும்.

4. ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுபாட்டில் 1962 முதல் இயங்கி வந்த ஆரம்ப கல்வி, சுகாதாரம், வேளாண்மை, கால்நடை, சத்துணவு போன்ற அனைத்து துறைகளும் ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் வரவேண்டும்.

5. ஊராட்சி ஒன்றியங்களில் காலியாக உள்ள ஒன்றிய பணியாளர் பதவிகளை ஊராட்சி ஒன்றியமே நிரப்பிக் கொள்ள அனுமதிக்க வேண்டும்.

6. ஊராட்சி ஒன்றிய சாலைப் பணியாளர்கள் பதவிகளை மீண்டும் நிரப்ப அனுமதி வழங்கவேண்டும்.

⌘ ⌘ ⌘

## குழு 2: ஊராட்சிகளுக்கு அதிகார ஒப்படைப்பு பற்றிய ஆலோசனைக் குழுவின் அறிக்கை

### 1.. ஊரக குடிநீர் திட்டங்கள்

கிராமங்களில் குடிநீர் வசதிக்காக போதுமான ஆழ்குழாய் கிணறுகள் இல்லை. ஆகவே அதிகப்படியான ஆழ்குழாய் கிணறுகள் அமைக்க தமிழக அரசுக்கு பரிந்துரை செய்யப்படுகின்றது.

### 2. விசைப்பம்புகள்

மேல்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டிகள் கிராமங்களில் போதுமான அளவு இன்னும் கட்டித் தரப்படவில்லை. ஆகவே தேவையான அளவுக்கு தேவையான கிராமங்களுக்கு உடடினயாக மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டித் தரும்படி தமிழக அரசை இக்குழு கேட்டுக்கொள்கிறது.

### 3. கைபம்பு, விசைபம்பு பராமரிப்பு

கைபம்புகள் பராமரிப்பதற்கு தற்பொழுதுள்ள பணியாளர்கள் போதுமானதாக இல்லை. ஆகவே அவர்களுடைய எண்ணிக்கையை 100 : 1 என்ற விகிதத்தில் நியமனம் செய்ய வேண்டும். கைபம்பு மற்றும் விசைபம்பு உதிரி பாகங்களை

வாங்கும் அதிகாரத்தினை ஊராட்சி ஒன்றியங்களுக்கே அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை இக்குழு பரிந்துரைக்கின்றது. கைபம்பு மற்றும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் அமைக்கப்படும்பொழுது ஊராட்சி மன்றத் தலைவர்களையும், பெருந்தலைவர்களையும் கலந்தாலோசித்து இடங்களை தேர்வு செய்யும்படி இக்குழு பரிந்துரை செய்கின்றது.

## 4. கூட்டு குடிநீர்த் திட்டம்

இத்திட்டம் கிராமங்களில் நல்லமுறையில் செயல்பட்டு மக்களுக்கு பயனளிக்கிறது. ஆகவே இதனை அனைத்து கிராமங்களிலும் இம்மாதிரியான திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்துவதற்கு இக்குழு பரிந்துரை செய்கிறது.

விசைபம்பு பராமரிப்பதற்கு தற்போது கோட்ட அளவில் ஒரு இளநிலைப் பொறியாளர் மட்டும் அவர்களுடைய கோட்டத்தில் உள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களுக்கும் சென்று பழுது பார்க்க இயலவில்லை. ஆகவே ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும், 25 மேல்நிலை தொட்டிகளுக்கு மேல் உள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒருஇளநிலை பொறியாளர் மற்றும் 2 தொழில் நுட்ப உதவியாளர்கள் என்ற வகையில் நியமனம் செய்ய வேண்டும் என்று இக்குழு பரிந்துரைக்கின்றது.

1500 மக்கள் தொகை உள்ள கிராமங்களில் மேல்நிலைத் தொட்டிகளில் இருந்து நீரினை விட்டு இணைப்பு மூலம் வழங்கி அதன் மூலம் ஊராட்சி மன்றங்களுக்கு வருமானத்தை பெருக்கும் வாய்ப்பினை ஏற்படுத்தித் தருமாறு இக்குழு அரசுக்கு பரிந்துரை செய்கின்றது. கிராம ஊராட்சி ஒன்றியங்களில் போதுமான நிதி வசதி இல்லாததால் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு உரிய மின்சாரக் கட்டணத்தை செலுத்த இயலவில்லை. ஆகவே மின்கட்டணத்தை கட்ட வசதி இல்லாத ஊராட்சி ஒன்றியங்களுக்கு அரசு முழு மான்யம் அளிக்க வேண்டும் என்று இக்குழு பரிந்துரை செய்கிறது.

## 5. மத்திய ஊரகத் துப்புரவுத் திட்டம்

தற்போது ஒரு தனி நபருக்கு கழிப்பிடம் கட்டுவதற்கு அரசு ரூ.2000/- மானியமும் ரூ.500/- பங்குத் தொகையும் கொடுக்கப்பட வேண்டும் என்று விதிமுறைகள் உள்ளது. மேற்படி கழிவறை ஏழை எளிய மக்களுக்குக் கட்டுவதனால் பங்குத் தொகையை ரூ.500/- கொடுக்கவேண்டும் என்பதை ரத்து செய்து முழு மானியத்தில கழிப்பறை கட்டுவதற்கு அரசு ஆணை பிறப்பிக்கவேண்டுமாய் இந்தக் குழு பரிந்துரை செய்கிறது.

பள்ளிகளில் குறிப்பாகப் பெண்கள் பள்ளிகளில் கழிப்பிடங்கள் இன்னமும் கட்டவேண்டிய நிலைமை உள்ளது. ஆகவே பள்ளிகளில் தேவைகளைக் கணக்கிட்டு ஒரே வருடத்தில் தேவையான அனைத்துப் பள்ளிகளுக்கும் கழிப்பறை கட்டுவதற்கு உதவிகள் வழங்க வேணுமாய் அரசுக்குப் பரிந்துரை செய்கிறது.

## 6. உள்ளூர் சாலை மானியம்

தற்போது அரசு வழங்கும் உள்ளூர் சாலை மானியம் போதுமானதாக இல்லை என்றும், சாலை மேம்பாடு செய்ய சாதாரண சாலைகளுக்கு ரூ.535/- கொடுப்பதை ரூ.1000/- ஆக உயர்த்தவேண்டும் என்றும், நபர் ஒன்றுக்கு 18 பைசா வீதம் கொடுப்பதை 50 பைசாவாக உயர்த்தவேண்டும் என்றும் இக்குழு பரிந்துரை செய்கிறது. சாலைப் பணியாளர்கள் இறந்துவிட்டால் ஏற்படும் காலம் பணியிடங்களில் அந்தப் பணியிடம் நிரப்பப்படாமல் இருக்கிறது. பணியாளர்கள் நியமனம் செய்யப்படுவது இல்லை. சாலை பராமரிப்பு அவசியம் என்பதன் காரணமாக ஊராட்சி ஒன்றிய சாலைகளின் எண்ணிக்கை மற்றும் நீளத்துக்கு ஏற்றவாறு சாலைப் பணியாளர்களை நியமனம் செய்து கொள்ள ஊராட்சி ஒன்றியத்திற்கு அதிகாரங்கள் வழங்கப்பட இக்குழு பரிந்துரை செய்கிறது.

1996–97ல் தமிழக அரசு 5000 கி.மீ. சாலைகளைத் தார் சாலைகளாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இதனை 10000 கி.மீட்டராக உயர்த்தித் தரும்படியும், அதற்குரிய நிதி வசதிகளை செய்து தரும்படியும் இக்குழு பரிந்துரை செய்கிறது.

## 7. தெரு விளக்குகள்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களும் பொறுப்பேற்ற பிறகு கிராமங்களில் தெரு விளக்குகள் எரிவதற்கு அதிகமான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. இதன் காரணமாக தெரு விளக்குகள் எரிவதில் தற்போது திருப்திகரமான நிலை ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களுக்கும் இக்குழு தனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றது.

### பரிந்துரைகள்

1) மின்விளக்கு பராமரிப்பினை தமிழ்நாடு மின் வாரியத்திற்கு ஒப்படைத்து விடலாம் எனவும், மின் விளக்கிற்கு தேவையான பொருட்களை உயர் மட்டக் குழுவினால் நிர்ணயம் செய்யப்படும் விலையில் தரம் வாய்ந்த உதிரிப்பாகங்களை ஊராட்சி ஒன்றியம் மூலம் வாங்கி, மின் வாரியத்திற்கு அளிக்கலாம் எனவும் இக்குழு பரிந்துரை செய்கிறது.

மின் கட்டணம் செலுத்துவதற்கு ஊராட்சிகளில் போதுமான நிதி வசதி இல்லை. எனவே மின் கட்டணம் முழுவதையும் அரசே ஏற்க இக்குழு பரிந்துரை செய்கிறது. மேலும் ஒட்டு மொத்த ஏழ்மை மற்றும் வறுமையில் வாடும் ஊராட்சிகளுக்கு விளக்கு மற்றும் உதிரிப்பாகங்கள் வாங்குவதற்கு தொகையினை அரசே எற்கவேண்டும் என்று இக்குழு பரிந்துரை செய்கிறது. கூடுதல் மின் விளக்குக் கம்பங்கள் அமைப்பதற்கு மின் வாரியத்திற்கு வைப்பு கட்டணத் தொகை செலுத்த இயலாத ஊராட்சிகளுக்கு அரசே முழு மான்யத் தொகை வழங்கவேண்டும் என இக்குழு பரிந்துரை செய்கிறது.

## 2. சமுதாய தொலைக்காட்சிப் பெட்டிகள் பராமரிப்பு

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் சுமார் **300** முதல் **500** தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளது. இவைகளை நிறுவுவதற்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் உத்தரவின் பேரில் அறைகள் கட்டப்பட்டு வருகிறது. இந்த தொலைக்காட்சிப் பெட்டிகளை பராமரிக்க தற்போது கோட்டயளவில் மட்டும் ஒரு தொழில் நுட்ப உதவியாளர் மட்டும் உள்ளார். இந்நிலையை மாற்றி ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியளவில் ஒரு தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் உடனாள் நியமிக்கப்பட்டு, ஒன்றிய அளவில் தொலைக்காட்சிப் பெட்டிகளை நல்ல முறையில் பராமரிக்க ஆவண செய்யவேண்டும். இதற்கான பராமரிப்பு செலவினை அரசே மான்யமாக அளித்திட இக்குழு கேட்டுக்கொள்கிறது.

## 3. சமுதாயக் கல்வி மான்யம்

தற்போது அரசு அளிக்கும் மான்யம் பத்திரிகைகள் மற்றும் கண்காட்சிகளுக்கு போதுமானதாக இல்லை. ஆகவே, இந்த மான்ய தொகையினை அதிகரித்துத் தரும்படி இக்குழு பரிந்துரை செய்கிறது.

## 4. கால்நடை பராமரிப்பு மான்யம்

கால்நடை மருத்துவமனைகளுக்கு **3**வது மற்றும் **4**வது கட்டிடம் கட்டுவதற்கு அரசு மான்யம் போதுமானதாக இல்லை. ஆகவே இதனை உயர்த்தித் தருமாறு இக்குழு பரிந்துரை செய்கிறது.

கால்நடை மருத்துவமனைகள் மற்றும் கால்நடை கிளை நிலையங்கள் ஆகியவற்றை ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவர பரிந்துரை செய்கிறது.

## 5. சிறுபாசன மான்யம் மற்றும் தலபாசன மான்யம்

முன்னாள் ஜமீன் ஏரிகள் பொதுப் பணித்துறையினரால் சீர் செய்யப்பட்டு ஊராட்சி ஒன்றியங்களுக்கு பராமரிப்பிற்காக கொடுக்கப்படுகிறது. அவைகளை பராமரிப்பதற்கு போதுமான மான்யம் அளிக்கும்படி இக்குழு பரிந்துரை செய்கிறது.

மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரு ஏரியை பராமரிக்க வேண்டும் என்று தற்போதுள்ள விதியை மாற்றி மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை பராமரிப்பதற்கு போதுமான நிதி வசதி செய்து தருமாறும் இக்குழு அரசுக்கு பரிந்துரை செய்கிறது.

### 6. ஊரக மருந்தகங்கள் மான்யம்

தற்போது ஊராட்சி ஒன்றியங்களில் ரூ.5400/- முழு நேர மருந்தகத்திற்கும் ரூ.2400/- பகுதிநேர மருந்தகத்திற்கும் அரசு மான்யம் அளிக்கப்படுகிறது. இவற்றிக்கு அரசு அளிக்கும் மான்யம் போதுமானதாக இல்லை. ஆகவே ஒரு மருந்தகத்திற்கு 1.00 இலட்சம் அரசு மான்யம் அளிக்கப்பட வேண்டும் என் இக்குழு பரிந்துரை செய்கிறது.

5000 மக்கள் தொகை உள்ள கிராமங்களுக்கு ஒரு சித்தா மருந்தகம் வீதம் அமைத்துத் தரும்படி இக்குழு அரசுக்கு பரிந்துரை செய்கிறது.

### 7. மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டம்

மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளில் சாலைப் பணிகள் மற்றும் பாலம் கட்டும் பணிகள் ஆகியவைகளுக்கு முன்னுரிமை அளித்து, தற்போதுள்ள 20% என்பதனை 40% ஆக அதிகரித்து ஆணைகள் வழங்கும்படி இக்குழு அரசுக்கும் பரிந்துரை செய்கிறது.

(2) ஊரக பகுதிகளுக்கு தற்போதுள்ள 60% மற்றும் நகர பகுதிகளுக்கு தற்போதுள்ள 40% ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இதனை ஊரக பகுதிகளுக்கு 75% ஆகவும், நகர பகுதிகளுக்கு 25% ஆகவும் மாற்றித் தரும்படி இக்குழு பரிந்துரை செய்கிறது.

### 8. பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி அபிவிருத்தித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் ஒரு பணிக்கு ரூ.10,00 இலட்சத்திற்கு மேற்பட கூடாது என்ற உச்சவரம்பினை நீக்கி விடலாம் என இக்குழு பரிந்துரை செய்கிறது.

### 9. சத்துணவுத் திட்டம்

அங்கவாடித் திட்டம், பள்ளி சத்துணவு திட்டம் ஆகியவைகள் ஊராட்சி ஒன்றியங்களின் நேரடி கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட வேண்டும் என இக்குழு பரிந்துரை செய்கிறது.

தற்போதுள்ள 15 நாட்களுக்கு ஒருமுறை முட்டை வழங்க வேண்டும் என்ற விதியினை மாற்றி வாரத்திற்கு ஒரு முறை முட்டை வழங்க இக்குழு பரிந்துரை செய்கிறது.

சோயாபீன்ஸ் கிராமங்களில் வரவேற்பு இல்லாததினால் இதற்கு பதிலாக பருப்பு அளவினை உயர்த்தி தரும்படி இக்குழு பரிந்துரை செய்கிறது.

தற்போது எண்ணெய் 1 கிராம் அளவு என்பதனை மாற்றி 1.5 கிராம் என்ற அளவில் வழங்கும்படி இக்குழு பரிந்துரை செய்கிறது.

தற்போது காய்கறி, மளிகை சாமான்கள் ஒரு நபருக்கு 0.18 பைசா வீதம் வழங்கப்படுவதை மாற்றி 0.25 பைசா வீதம் வழங்கும்படி இக்குழு பரிந்துரை செய்கிறது.

### 10. தலவரி, தலமேல் வரி ஈட்டு மானியம்

தலவரியில் கல்வி நிதிக்குக் கொடுக்கப்படும் பங்குத் தொகையை நிறுத்திவிட்டு, இதனை ஊராட்சி ஒன்றியப் பொது நிதிக்கு அளிக்கும்படி இக்குழு பரிந்துரை செய்கிறது.

### 11. வீட்டு வரி இணை மானியம்

வீட்டு வரி இணை மானியம் தற்போது 100 சதவீதமாக அளிக்கப்படுகிறது. இதனை 200 சதவீதமாக உயர்த்திக் தருமாறு இக்குழு பரிந்துரை செய்கிறது. வீட்டு வரி மற்றும் தொழில் வரி ஆகியவைகளை வசூல் செய்வதற்கு ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒரு முழு நேர ஊழியர் நியமனம் செய்ய இக்குழு பரிந்துரை செய்கிறது. மேலும் ஊராட்சியின் வரவு,

செலவுக் கணக்குகளை அவ்வப்போது எழுதுவதற்கும் ஊராட்சி மன்றத் தலைவருக்கு உதவியாக இருப்பதற்கு ஒரு இளநிலை எழுத்தாளர் பணியிடம் தோற்றுவிக்கவேண்டும். இதற்குரிய செலவினத்தை அரசே ஏற்றுக்கொள்ளும் படியும் இக்குழு பரிந்துரை செய்கிறது.

12. ஊராட்சி ஒன்றியத் தலைவர்களின் முக்கிய கோரிக்கைகள்

ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களுக்கு மதிப்பூதியம் ரூ.1000/- ஆகவும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் கிராமங்களுக்கு அடிக்கடி ஆய்வுசெய்யவேண்டி உள்ளதால் அவர்களுக்கு ஊராட்சி ஒன்றிய ஜீப்புகளுக்கு உள்ள டீசலின் இலக்கினை மாற்றி 300 லிட்டராக உயர்த்தி தரமாறு இக்குழு பரிந்துரை செய்கிறது.

## குழு . 3 : "ஊராட்சி ஒன்றியங்களின் நிதி ஆதாரங்களும் அதனை மேம்படுத்தலும் தொடர்பாக" ஊராட்சி ஒன்றிய தலைவர்களின் பரிந்துரைகள்

பரிந்துரைகள்

1. தெருவிளக்கு மின்கட்டணம், குடிநீர் விசைப்பம்பு மின்கட்டணம் ஆகியவற்றை முழுவதும் அரசே ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏற்கனவே விவசாய மின்சாரப் பம்பு செட்டுகளுக்கு இலவசமாக மின்சாரம் கொடுப்பது போல் இதுவும் அரசால் கொடுக்கப்பட வேண்டும்.

2. கல்குவாரி, மணல், செம்மன் கிராவல் எடுக்கும் உரிமை அரசால் ஏலமிடுவதற்கு பதிலாக ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மேலே கண்ட இனங்களில் ஏலமிடும் உரிமை ஊராட்சி ஒன்றியத்திற்கு வழங்க வேண்டும். அதில் வருமானம் 50 சதவிகிதம் ஊராட்சி ஒன்றியத்திற்கும், 50 சதவிகிதம் ஊராட்சிக்கும் கொடுக்க வேண்டும்.

3. தனியார் நிலங்களில் கல்குவாரி, மணல் எடுக்கும் உரிமைக்கு உரிமம் தாசில்தார் வழங்கி, கட்டணம் அரசுக்கு செலுத்தப்பட்டு தற்பொழுது 90% ஊராட்சி ஒன்றியத்திற்கு வரவுவைக்கப்படுகிறது. (45% ஊராட்சி ஒன்றியம், 45% ஊராட்சி). இந்தக் கட்டணத்தை நேரடியாக ஊராட்சி ஒன்றியத்திற்கு செலுத்த அரசு உத்திரவிட வேண்டும். அரசிடமிருந்து இந்தக் கட்டணம் 90% பெற மிக காலதாமதமாகிறது.

4. ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான வாரச்சந்தைகள், பேரூராட்சி எல்லையில் இருந்தாலும், ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பிலும் வருமானம் ஊராட்சி ஒன்றியத்திற்கு வர வேண்டும். சுங்கவரி வசூலிக்கும் இனங்களும் ஊராட்சி ஒன்றியத்திற்கே கொடுக்கப்பட வேண்டும்.

5. 1–4–74 முதல் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள் (அலுவலக உதவியாளர்கள், பதிவறை எழுத்தர்கள், மகப்பேறு ஆயாக்கள் போன்றவர்கள் நீங்கலாக) அரசுப் பணியாளர்களாக மாற்றி அரசு உத்திரவிட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து பணியாளர்கள் தமிழ்நாடு தேர்வாணையம் மூலம் பணியமர்த்தப்பட்டு வருகின்றனர். ஆனால் 5 இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர் ஆகியோர்களுக்கு மாதந்தோறும் சம்பளம் மற்றும் இதர படிகள் ஒன்றியப் பொது நீதியிலிருந்து வழங்கப்படுகிறது. இதனால் கணிசமான தொகை ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து செலவாகிறது. எனவே, இப்பணியாளர்கள் ஊதியத்தை அரசுத் தலைப்பிலிருந்து பெறும் வகையில் உத்திரவு பிறப்பிக்கலாம்.

6. நாகை காயிதே மில்லத் மாவட்டத்தில் "ஒ.என்.ஜி.சி" இயற்கை வாயு, மற்றும் எண்ணெய் எடுப்பதற்கு ராயல்டி வசூல் செய்கிறார்கள். அதில் 25% ஊராட்சி ஒன்றியத்திற்கு கொடுக்க வேண்டும்.

7. உள்ளூர் சாலை மான்யம் தற்பொழுது வழங்கப்படும் விகிதம் போதுமானதாக இல்லை. சாலைப் பணியாளர்கள் (கேங்க் கூலிகள்) சம்பளம் கொடுக்கவே போதுமானதாக இல்லை. இதனை ஒவ்வொரு ஒன்றியத்திலும் உள்ள சாலையின் நீளம், சுழற்சி முறையில் பராமரிப்பு மதிப்பீட்டின் அடிப்படையில் மான்யம் வழங்க வேண்டும்.

8. பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம் அரசு நிலங்களில் ஆண்டிமடம், ஜெயங்கொண்டம், செந்துறை ஊராட்சி ஒன்றியங்களில் வனத்துறையினர் அரசு வனத்தோட்ட கழகம் மூலம் முந்திரி மரங்கள் பெருமளவில் பயிரிட்டு ஒரு ஆண்டிற்கு கிடைக்கும் ஏல வருமானம் ரூ.1 கோடிக்கு மேல் உள்ளது. இதில் 50% ஊராட்சி ஒன்றியத்திற்கு வழங்க வேண்டும்.

9. மதுக் கடைகள் ஏலம் அரசு விடுவதின் மூலம் வருமானத்தை 25% ஊராட்சி ஒன்றியத்திற்கு வழங்க வேண்டும்.

10. ஊராட்சி ஒன்றியப் பகுதியில் உள்ள பொதுப்பணித்துறை, ஊராட்சி ஒன்றிய கண்மாய்களில், கால்வாய்களில் வளர்க்கும் மரங்களை ஏலம் விடும் உரிமை ஊராட்சி ஒன்றியத்திற்கு வழங்க வேண்டும்.

சமூகக் காடுகள் துறை மூலம் கண்மாய்களில் வளர்க்கும் மரங்களையும் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் ஏலம் விட வேண்டும்.

11. மீன்பாசி ஏலமிடும் உரிமையும் எல்லாக் கண்மாய்களிலும் ஊராட்சி ஒன்றியத்திற்கு வழங்க வேண்டும்.

12. தென் ஆற்காடு வள்ளலார் மாவட்டம் கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலுள்ள நெய்வேலி லிக்னைட் நிறுவனம் பக்கத்திலுள்ள கிராமங்களுக்கு அடிப்படை வசதி செய்ய அரசு உத்திரவிட வேண்டும்.

13. அரசுக்கு ஒப்படைக்கப்பட்ட புறம்போக்கு இடங்களிலும் வருமானம் அளிக்கும் மர வகைகளை நடுதல், பாதுகாத்தல் முதலிய பணிகளை செய்ய ஊராட்சி ஒன்றியத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டால் ஊராட்சி ஒன்றியத்தின் நிதி ஆதாரத்தைப் பெருக்கலாம்.

14. ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான கட்டிடங்களை அரசுத்துறைக்கு வாடகைக்கு விட்டு வருவாயை அதிகரிக்கலாம்.

15. முத்திரைக் கட்டணத்தில் 25% ஊராட்சி ஒன்றிய பொது நிதிக்கு வழங்கப்பட வேண்டும்.

16. ஊராட்சி எல்லைக்குள் வைக்கப்படும் விளம்பரப் பலகைகளுக்கு உரிமக் கட்டணம் விதித்து வசூல் செய்யலாம்.

17. ஊராட்சி ஒன்றியப் பொது நிதிக்கு கொடுக்கப்படும் அரசு மானியம் 1996–97க்கு ரூ.10.00 லட்சம் அனைத்து ஊராட்சி ஒன்றியத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது. இதனை ஊராட்சி ஒன்றியங்களில் 1 முதல் 6 வரை உள்ள வகைப்படி ஒவ்வொரு ஆண்டும் ஊராட்சி ஒன்றியத்திற்கு வழங்க வேண்டும்.

18. காற்றாடிகளைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் இடங்களில் இதற்கு அரசு பல சலுகைகள் செய்து வருகிறது. எனவே இந்த இடங்களில் ஒவ்வொரு மின் காற்றாடிக்கும் ரூ.2,500 முதல் 3,000 வரை வரி விதித்து அதனை ஊராட்சி ஒன்றியப் பொது நிதியில் சேர்க்கலாம்.

## குழு 4: ஊராட்சி ஒன்றியங்களின் கடமைகளும் பொறுப்புகளும் பற்றிய அறிக்கை

1. ஊராட்சி கூட்டங்களின் போது, ஊராட்சி மன்ற உறுப்பினர்களும் ஊராட்சி மன்ற கூட்டத்தின் பொழுது, மாவட்ட ஊராட்சித் தலைவர்களும் கலந்து கொள்ளுதல் அவசியம். அவ்வாறு பங்கேற்று கூட்டத்தில் கலந்து கொள்வதால் ஆங்காங்கே உள்ள குறைபாடுகளும், பிரச்சனைகளும் தெரிய வந்து, அதனை எளிதில் தீர்க்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக இருக்கும்.

2. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர்களுக்கும் அரசு செலவில் தொலைபேசி வசதி செய்து கொடுக்க அரசு வழி வகை செய்ய வேண்டும்.

3. ஊராட்சி ஒன்றிய தலைவரது வீட்டில் தொலைபேசி வசதி செய்ய ஏற்கனவே ஆணை இருப்பினும், அதனை உடனே அவர்களது வீட்டில் இணைப்பினைப் பெற உரிய ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும்.

4. ஊராட்சி ஒன்றிய தலைவர்களுக்கு தனியாக அலுவலகத்திற்கு தொலைபேசித் தொடர்பு அமைக்க ஆவன செய்ய வேண்டும்.

5. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாதாந்திர ஊதியம் வழங்கப்படுவது போல் ஊராட்சி ஒன்றியதலைவர்கள், ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள், ஊராட்சித் தலைவர்கள் மற்றும் ஊராட்சி உறுப்பினர்களுக்கு மாதாந்திர ஊதியம் வழங்க வழி வகை செய்ய வேண்டும்.

6. ஊராட்சி ஒன்றிய தலைவர்களுக்கு அரசு செலவில் தனியாக ஒரு வாகனம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

7. ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள பழைய மற்றும் கழிவிடை செய்யப்பட வேண்டிய வாகனங்கள் அனைத்தையும் மாற்றி புதிய வாகனங்கள் வழங்க உடனடியாக ஆவன செய்ய வேண்டும்.

8. ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெறும் அனைத்து பிறதுணை திட்டப்பணிகளை அந்தந்த ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சிக்கு தெரிவித்தால் அது தேவையான வேலைதானா ? சரியான முறையில் நடைபெறுகிறதா ? தவறுகள் உள்ளனவா என கண்காணிக்க வாய்ப்பாக இருக்கும்.

9. பழங்காலத்தில் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள அநேக ஊராட்சி ஒன்றியக் கட்டிடங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் அலுவலர்கள் அமர்ந்து பணி செய்ய எதுவான நிலையில் இல்லாமல் உள்ளது. இது போன்ற கட்டிடங்கள் புதுப்பிக்கவோ அல்லது புதிதாக கட்டவோ உரிய ஆணை விரைவில் வழங்கிட வேண்டும். தற்போது நெடுஞ்சாலை துறையினால் பராமரிக்க இக்கட்டிடங்களை ஊராட்சி ஒன்றிய பராமரிப்பிலேயே கொண்டு வரவும் ஆணை வேண்டப்படுகிறது.

10. ஊராட்சிகளால் பராமரிக்கப்படும் தெரு விளக்குகளுக்குரிய டியூப் லைட், சோக், ஸ்டாட்டர் மற்றும் பட்டீஸ் ஆகியவைகளை அரசு உத்திரவுப் படி ஊராட்சி ஒன்றியத்தினால் ஒரு நிறுவனத்தில் தான் வாங்க வேண்டும் என்ற நிர்பந்தத்தை மாற்றி அந்தந்த ஊராட்சி தலைவர்களே தரமான நிறுவனங்களில் உள்ளூர் நிறுவனங்களிலே விலைப்புள்ளிகள் பெற்று வழங்குவதற்கு வழிவகை செய்ய வேண்டும். உதிரி பாகங்கள் வாங்குவதற்காக நிர்ணயிக்கப்பட்ட உச்ச வரம்பினை அகற்றப்பட வேண்டும், அல்லது இயற்கை இடர்பாடுகளினால் மின்சார உதிரி பாகங்கள் பாதிக்கப்படும் பொழுதாவது, இதற்கான உச்சவரம்பு அகற்றப்பட வேண்டும்.

11. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தொலைதூரப் பயணங்களுக்கு இலவச பஸ் பாஸ் அளித்திருப்பது போல் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர்களுக்கும் பஸ் பாஸ் அளிக்க வழி வகை செய்ய வேண்டும்.

12. ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தின் கீழ், ஏற்கனவே செயல்பட்டு வந்து பின் தனியாகப் பிரிந்த கல்வித்துறை, பொது சுகாதாரத் துறை, கால் நடை விவசாயத் துறை ஆகியவற்றை மீண்டும் ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தின் கீழ் செயல்பட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதனால் ஊராட்சிகளில் கல்வித் தரம் உயர்வதற்கும், சுகாதார நிலையங்கள் திறம்பட செயல்படுவதற்கும் விவசாயத்தில் நல்ல முன்னேற்றம் காணவும் உரிய வழிவகை ஏற்படும். எனவே, 1994ம் ஆண்டு ஊராட்சி சட்டத்தில் குறிப்பிட்டுள்ள 29 துறைகளையும் ஊராட்சிகளின் பொறுப்பில் ஒப்படைத்து அவற்றின் மீதான நிர்வாக கட்டுப்பாடுகளை ஊராட்சியின் மூன்றடுக்குகளுக்கும் பிரித்தளிக்கப்பட வேண்டும்.

13. ஊராட்சி தெருவிளக்குகளுக்குரிய மின் கட்டணத்தை ஊராட்சிகளில் வசூல் செய்வதற்குப் பதில் அரசே மின் கட்டணத்தை ஏற்றுச் கொள்ள வேண்டும்.

14. தனிமங்கள் மூலம் கிடைத்திடும் வருமானங்களை அந்தந்த ஆண்டு ஊராட்சி நிதியில் வரவு வைத்திட ஆவன செய்திட வேண்டும்.

15. ஊரக பகுதிகளில் உணவு கலப்பட தடுப்பு சட்டத்தினை செயலாக்கிடவும் ஆவன செய்ய வேண்டும்.

16. ஊராட்சி ஒன்றியங்களிலிருந்த சமூகக் காடுகள் விரிவாக்க அலுவலர், ஆதி திராவிடர் நலம் விரிவாக்க அலுவலர் போன்ற பதவிகளை மீண்டும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அனுமதிக்க வேண்டும். கோட்ட வளர்ச்சி அதிகாரி (டி.டி.ஒ) அலுவலகத்தையும், உதவி வட்டார வளர்ச்சி அதிகாரி (எ.பி.டி.ஒ) பதவியையும் எடுத்துவிடப் போவதாக அறிகிறோம். நிர்வாக பளுவை மனதில் கொண்டு அலுவலர்களை குறைக்கக் கூடாது என்பதுடன் அனைத்து ஊராட்சி ஒன்றிபங்களிலும் கூடுதலாக ஒரு தட்டச்சர் பணியிடமும் தோற்றுவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

18. சாலை அமைக்கும் பணிக்கு, நெடுஞ்சாலைத் துறையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள விலை நிர்ணயித்தினையே ஊராட்சி ஒன்றியங்களுக்கும் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

19. எண்ணெய் எரிவாயு நிறுவனத்தினரால் இயற்கை எரிவாயு எடுக்கும் பகுதிகளில் செல்லும் சாலைகள் அனைத்தும் ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் அமைவதால் ஊராட்சி ஒன்றிய சாலைகள் அடிக்கடி பழுதடைகிறது. எனவே இச்சாலைகளை பராமரிப்பில் செலவினம், மத்திய அரசு இதற்கான "ராயல்டி" தொகையினை அந்தந்த ஊராட்சி ஒன்றிங்களுக்கு வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும்.

20. தற்போது வழங்கப்பட்டு வரும் தலசாலை மான்யம் உயர்த்தி வழங்கப்பட வேண்டும்.

21. ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள், மூன்றில் ஒரு பங்கு பெண் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதால் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் தனியாக பெண்களுக்கென ஒரு கழிப்பறை வசதி செய்து தர வேண்டும்.

22. யூனியனில் உட்பட்ட பகுதி வாழ் மக்களுக்கு வருமான சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், போன்றவை யூனியன் ஆணையாளரால் தலைவரின் மேற்பார்வையில் வழங்கப்பட வேண்டும்.

23. யூனியனில் தலைவர் நல்லமுறையில் செயல்பட அரசு ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

24. ஏற்கனவே ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள இளநிலை உதவியாளர் மற்றும் அலுவலக உதவியாளர் பணியிடங்களை மீண்டும் வழங்கி செயல்பட ஆணை பிறப்பிக்க வேண்டும்.

25. ஊராட்சி ஒன்றிய உபரி பொது நிதியிலிருந்து எடுத்து செய்யும் பணிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ரூ.2 லட்சம் வரையும் ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு ரூ.5/- லட்சமும் அனுமதிக்கப்பட்ட வரம்பினை முறையே ரூ.5 லட்சம், ரூ.10 லட்சம் என அனுமதிக்க ஆணை பிறப்பிக்க கேட்டுக் கொள்ளப்பட்டது.

26. ஊராட்சி ஒன்றியத்தில் தற்போது தொலைக்காட்சிப் பெட்டிகள் அனைத்து ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும் செயல்பட்டு வருகிறது. இதனை பழுது ஏற்படும் காலத்தில் உடனுக்குடன் பழுது பார்த்திட ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு டெக்னீஷியன் பணியிடம் ஏற்படுத்தல்.

27. ஊராட்சி ஒன்றியங்களில் தற்போது வேலைபளு அதிகமாக உள்ளதால், ஒரு ஒன்றிய பொறியாளரால் அனைத்து வேலைகளையும் கவனிக்க இயலவில்லை. அதனால் பணிகள் சிறப்பான நிலையில் முடிக்க இயலாத நிலையில் உள்ளது. எனவே கூடுதலாக ஒரு ஒன்றிய பொறியாளரோ அல்லது ஜனத்தொகை மற்றும் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் ஒரு கூடுதல் ஒன்றியப் பொறியாளரோ நியமிக்க வழிவகை செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

28. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் செயல்படுத்தப்படும் சமூக நலப்பணிகள் அனைத்தும் ஊராட்சி ஒன்றியப் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். குறிப்பாக மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் திருமணத் திட்டம் மற்றும் டாக்டர் முத்துலட்சுமி மகப்பேறு திட்டம் போன்றவைகள் ஊராட்சி ஒன்றியத்திலேயே அனுமதி அளிக்கப்பட்டு உடனுக்குடன் பயனாளிகளுக்குக் கிடைக்க வழிவகை செய்யப்பட வேண்டும்.

29 ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களில் சில பிரிவுகளை அரசுப் பணியாளர்களாக ஆக்கப்பட்டும் (Provisionalised) அவர்களது ஊதியம் ஊராட்சி ஒன்றிய நிதியினின்று பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது. இதனை மீள அரசு மான்யமாக வழங்க வேண்டும்.

30. 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை வீட்டு வரி நிர்ணயம் புதிதாக கணக்கெடுக்கப்பட்டு மாற்றியமைக்கப்பட வேண்டும் என்ற நிலை இருந்தும் கடந்த பல ஆண்டுகளாக இவை மாற்றப்படவில்லை. இதற்காக உடனடியாக அலுவலர்களை நியமனம் செய்து, வீட்டுவரிகளை புதிதாக நிர்ணயம் செய்ய வேண்டும்.

31. நகராட்சி பகுதிகளில் புதிதாகச் கட்டப்படும் கட்டிடங்களை சோதனையிட்டு அனுமதி வழங்க தனியாக அலுவலர்கள் உள்ளனர். அதே நிலையில் ஊராட்சி ஒன்றியத்திற்காக கட்டிட ஆய்வாளர்கள் (Building Inspectors) தனியாக நியமனம் செய்யப்படவேண்டும்.

32. தற்போது ஊராட்சி பகுதிகளில் தெருவிளக்கு விரிவுபடுத்த விளக்கு ஒன்றுக்கு ரூ.3460/- வீதம் மின் வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய நிலை உள்ளது. இதனை குறைக்கவோ அல்லது முழுமான்யமாகவோ ஊராட்சிக்கு வழங்கப்பட வேண்டும்.

33. கள்ளச்சாராயம் ஒழிப்பு மற்றும் மது ஒழிப்பினை ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் முழுமையாகச் செயல்படுத்த ஒன்றியத் தலைவர் மற்றும் குழு உறுப்பினர்களை உள்ளடக்கிய தனியாகக் குழு ஏற்படுத்தி தீவிரமாக கண்காணிக்க வழிவகை செய்தல்.

34. ஊராட்சி அமைப்பும் வருவாய்த்துறை அமைப்பும் மாதம் ஒருமுறை கூட்டம் நடத்தி ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய ஆக்கிரமிப்பு சொத்துக்களை பட்டியலிட்டு மீட்க நடவடிக்கை மேற்கொண்டு அரசு வழிவகை செய்ய வேண்டும்.

35. திட்டப் பணிகளை மாவட்டங்களில் செவ்வனே செயல்படுத்த அந்தத் துறையிலேயே (ஊரக வளர்ச்சி) மிகுந்த அனுபவம் வாய்ந்த அலுவலர்களையே பதவி உயர்வில் நியமித்தல், ஊரகப் பகுதியில் நிலைமையினை அறிந்து செயல்பட ஏதுவாக அமையும். எனவே நேர்முகமாக இந்திய ஆட்சிப் பணி (ஐ.ஏ.எஸ்) அதிகாரிகளை நியமனம் செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

# 30.11.96 அன்று மாவட்ட ஊராட்சி தலைவர்களின் குழுக் கூட்டத்தில் ஏக மனதாக எடுக்கப்பட்ட தீர்மானங்களின் விவரங்கள்

1. தமிழகத்தில் பல ஆண்டு காலமாக நடைபெறாமல் இருந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு வெற்றி கரமாக தேர்தல் நடத்தியும் பெண்களுக்கும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களுக்கும் போதுமான இட ஒதுக்கீடு செய்து, அண்ணல் காந்தி கண்ட கிராம இராஜ்யத்தை நனவாக்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர். கலைஞர் அவர்களுக்கு மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் குழு தனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

2. உள்ளாட்சி அமைப்புகளில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள மாவட்ட ஊராட்சிகள் சிறப்பாக செயல்படவும், கிராம மக்களின் தேவைகளை பூர்த்தி செய்திடவும். பொறுப்புகளையும், அதிகாரங்களையும் மற்றும் தேவையான நிதி ஆதாரங்களையும், நிர்வாக அமைப்புகளையும் மாவட்ட ஊராட்சிகளுக்கு வழங்கி இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்படி இந்த அமைப்பு தோற்றுவிக்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேறுகின்ற வகையில் தமிழக அரசு வழிவகை செய்திட வேண்டுகிறோம்.

3. கிராமப்புற மக்களுக்கு அடிப்படை வசதிகள் முழுமையாக கிடைத்திடவும், திட்டத்தின் பலன்களும், சலுகைகளும் உரியவர்களுக்கு முழுமையாக சென்றடையவும், மாவட்ட ஊராட்சிகளுக்கு சில பொறுப்புகளும், அதிகாரங்களும் கீழ்கண்டவாறு அமைய வேண்டும்.

   (அ) சில துறைகளின் மாவட்ட அளவிலான அதிகாரியையும், அவரின் கீழ் பணிபுரியும் அலுவலர்களையும் மாவட்ட ஊராட்சியின் நேரடி கட்டுப்பாட்டில் கொண்டு வர வேண்டும்.

   (ஆ) சில துறைகளின் திட்டப்பணிகள் மாவட்ட ஊராட்சிகளின் ஒப்புதல் / பரிந்துரை பெற்ற பின்பே நிறைவேற்றப்படல் வேண்டும்.

   (இ) சில துறைகளில் பணிகளை கண்காணிக்கவும், மற்றும் மேற்பார்வையிடவும் மாவட்ட ஊராட்சிக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

   (ஈ) ஊரக பகுதிகளில் பல்வேறு துறைகளின் வளர்ச்சித் திட்டப்பணிகளுக்கு பயனாளிகளை தேர்ந்தெடுக்கும்போது, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

4. பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிராம மக்களுக்கு வழங்குவது பஞ்சாயத்துகளின் தலையாய கடமையாகும். தற்போது தமிழ்நாடு குடிநீர் வாரியம் (ட்வார்டு) கைப்பம்பு, விசைப்பம்பு மற்றும் கூட்டுக் குடிநீர் திட்டம் (சி.டபிள்யூ. எஸ்.எஸ்) ஆகிய திட்டத்தினை செயல்படுத்துகிறது. கூட்டுக் குடிநீர் திட்டத்தை குடிநீர் வாரியமே பராமரித்து வருகிறது. கைப்பம்பு மற்றும் விசைப்பம்பு ஆகியவைகளை பணி முடிந்த பின்பு பஞ்சாயத்துகளுக்கு ஒப்படைக்கிறது.

   குடிநீர் வாரியம் கூட்டுக் குடிநீர் திட்டத்தை மட்டும் தொடர்ந்து செயல்படுத்த வேண்டும். கைப்பம்பு மற்றும் விசைப்பம்பு செயல்படுத்தும் பணிகளை மாவட்ட ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும். குடிநீர் வாரியம் கூட்டு குடிநீர் திட்டத்தை மட்டும் தொடர்ந்து செயல்படுத்தவும், பராமரிக்கவும் வேண்டும். கைபம்பு மற்றும் விசைபம்பு (ஓ.ஹெச்.டி) திட்டங்களை செயல்படுத்தும் பொறுப்பு மாவட்ட ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும். இப்பணிகள் நிறைவேற்றிய பின்பு பராமரிப்பிற்கு ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சி மன்றத்திற்கு ஒப்படைக்கப்படும். மேற்கூறிய பணிகளை நிறைவேற்ற குடிநீர் வாரியத்தின் ஊரக பிரிவு செயற்பொறியாளர் (எக்ஸிகூட்டிவ் இன்ஜினீயர்) (ஆர். டபுள்யூ.எஸ்.) மற்றும் அவரைச் சார்ந்த அனைத்து அலுவலர்களும் மாவட்ட ஊராட்சியின் நேரடி கட்டுப்பாட்டில் இயங்க வேண்டும். மேலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் பணிபுரியும் உதவி செயற்பொறியாளர் (விசைப்பம்பு பராமரிப்பு) மற்றும் அவரது சார்பு அலுவலர்கள் மாவட்ட ஊராட்சிக்கு மாற்றப்பட வேண்டும்.

5. சமூகநலத் துறையின் மூலம் ஏழை மக்களுக்கு பயன்படக்கூடிய பல்வேறு திட்டம் பணிகள் (சத்துணவு திட்டம் உட்பட) செயல்பட்டு வருகின்றன. இதைப் போல், மாவட்ட ஆட்சியரின் கீழ் பணிபுரியும் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் (டி.எ.டி.டபிள்யூ.ஓ.) மற்றும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் (டி.பி.சி.டபிள்யூ.ஓ.), பல்வேறு சலுகைகளை (வீட்டுமனை இல்லாத ஏழைகளுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்குதல் உட்பட) ஆதிதிராவிடர்களுக்கும், பிற்படுத்தப்பட்டோர்களுக்கும் வழங்குகிறார்கள். இந்த மூன்று துறைகளின் திட்டங்கள் அனைத்தும் அதிகாரிகள் மூலமாக செயல்படுத்தப்படுவதால் உரியவர்களுக்கு சரிவர போய் சேருவதில்லை. இதனைத் தவிர்க்க மாவட்ட ஊராட்சியின் கீழ் மாவட்ட சமூக நல அலுவலர் (டி.எஸ்.டபிள்யூ.ஓ.) மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் (டி.எ.டி. டபிள்யூ.ஓ.) ஆகியோர்கள் மற்றும் அவரின்கீழ் பணிபுரியும் அனைத்து அலுவலர்களும் கொண்டு வரப்பட வேண்டும். மேலும், இவர்கள் செயல்படுத்தும் திட்டங்கள் அனைத்தும் மாவட்ட ஊராட்சிகளின் மூலமாகவே செயல்படுத்தப்பட வேண்டும்.

6. கீழ்கண்ட துறைகளின் மூலமாக செயல்படுத்தப்படும் திட்டங்கள் தேர்வு செய்கின்ற பொறுப்புகளை மாவட்ட ஊராட்சியின் ஒப்புதலோ / பரிந்துரையோ பெற்ற பின்பே செயல்படுத்த வேண்டும்.

   1. கோட்டப் பொறியாளர் (ஊரக சாலைகள்) மூலம் மேம்பாட்டிற்கு எடுக்கப்படும் ஊராட்சி ஒன்றிய சாலைகள்.
   2. கரும்பு அபிவிருத்தி சாலை திட்டத்தில் எடுக்கப்படும் சாலைகள்.
   3. வேளாண் விற்பனை குழுவின் மூலம் எடுக்கப்படும் சாலைகள்.
   4. புதிதாக கட்ட எடுக்கப்படும் கால்நடை மருந்தகங்கள்.
   5. புதிதாக கட்ட எடுக்கப்படும் ஆரம்ப சுகாதார நிலையங்கள்.
   6. மண்வளப் பாதுகாப்பு மற்றும் வேளாண்மை பொறியியல் துறை மூலம் செயல்படுத்தும் திட்டங்கள்.
   7. மாவட்ட மேலாளர், ஆதிதிராவிடர் நல வாரியம் (தாட்கோ) மூலம் செயல்படுத்தும் திட்டங்கள்.
   8. மாவட்ட தொழில் மையம் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள்.
   9. உதவி இயக்குநர், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள்.
   10. அனைத்து அறிவொளித் திட்டங்கள்.

7. கல்வி

தற்போது ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள தொடக்கப்பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிக்கட்டிடங்கள் புதிதாக கட்டவும், பராமரிக்கவும், ஊராட்சி ஒன்றியங்கள் பொறுப்பேற்கின்றன. ஆனால் உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கான கட்டிடங்கள் கட்டுவதும், பராமரிப்பதும் பொதுப்பணி துறையால் மேற்கொள்ளப்படுகின்றன. இந்நிலையில் உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிக் கட்டிடங்கள் போதிய நிதி ஒதுக்கீடு இன்மையாலும், தக்க பராமரிப்பின்மையாலும், மிக மோசமான நிலையில் உள்ளது. எனவே உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதையும் பராமரிப்பதையும் மாவட்ட ஊராட்சியின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

ஊராட்சிப் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர கல்வி மிகவும் அவசியம். தரமான கல்வியை வழங்கும் அவசியத்தினை கருத்தில் கொண்டு, தொடக்கப் பள்ளி முதல் மேல்நிலைப் பள்ளி வரை அனைத்து பள்ளிகளில் செயல்பாடுகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்யும் பொறுப்பினை மாவட்ட ஊராட்சித் தலைவர் / உறுப்பினர்களுக்கு வழங்க தக்க ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும். பள்ளிகளில் அடிப்படை வசதிகள்

மற்றும் கல்வித்தரம் இவற்றைப் பற்றி ஆய்வு செய்ய தக்க நடவடிக்கை எடுக்கும்பொருட்டும் முதன்மை கல்வி அலுவலரும். மாவட்ட கல்வி அலுவலர்களும் மாவட்ட ஊராட்சிக்கூட்டங்களில் கலந்துகொள்ள வேண்டுமென்று அரசு தக்க ஆணை பிறப்பிக்க வேண்டும்.

8. சுகாதாரம்

ஊரகப்பகுதிகளில் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் இயங்குவதில் குறைபாடுகள் உள்ளது பற்றிய பொதுக்கருத்து உள்ளது. இதனை தவிர்க்கும் வகையில், ஊரக மக்களுக்கு பொது மருத்துவ வசதி முழுமையாக கிடைக்க ஏதுவாகவும், ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர்கள் வருகை, மருந்துகள் வழங்கப்படுவது, படுக்கை வசதிகள் இவற்றை நேரடியாக பார்வையிட்டு ஆய்வு செய்ய மாவட்ட ஊராட்சித் தலைவர் / உறுப்பினர்களுக்கு தக்க அனுமதி வழங்க ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும். மேலும் மாவட்ட ஊராட்சி மன்றக் கூட்டங்களில், ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பாடுகள் குறித்து விவாதிக்க மாவட்ட துணை இயக்குநர் (சுகாதாரம்) கலந்து கொள்ள அரசு தக்க ஆணை பிறப்பிக்க வேண்டும்.

9. ஊரக மக்களுக்கு நியாயவிலைக் கடைகள் மூலம் வழங்கப்படும் அத்தியாவசிய பொருட்கள் வழங்குவதில் குறைபாடுகள் மக்களால் தெரிவிக்கப்படுகின்றது. இதனை தவிர்க்க, நியாய விலைக்கடைகள் செயல்பாட்டினை கண்காணிக்கத்தக்க அளவில், மேற்பார்வையிட்டு ஆய்வு செய்ய மாவட்ட ஊராட்சித் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு அனுமதி வழங்க தக்க ஆணை பிறப்பிக்க வேண்டும். மாவட்ட அளவில் இதன் பொறுப்பு அலுவலர்களான இணைப்பதிவாளர் / துணைப்பதிவாளர் (பொதுவிநியோகம்) மற்றும் மாவட்ட வழங்கல் அலுவலர் ஆகியோரை மாவட்ட ஊராட்சி வளர்ச்சி மன்றக்கூட்டத்தில் கலந்து கொள்ள ஆணை பிறப்பிக்க வேண்டும்.

10. மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களும் பொதுமக்களால் நேரிடையாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இதனால் வாக்களித்த பொதுமக்களிடையே அந்த உறுப்பினர்களிடமிருந்து அதிகமாக எதிர்பார்ப்பு உள்ளது. மற்றும் அவர்களது தேவைக்காக குறைத்தீர்க்கக் கோரும் மனுக்கள் அதிகம் பெறப்படுகின்றன. எனவே இந்தக்கோரிக்கைளை நிறைவேற்ற கீழ்கண்ட திட்டங்களில் பயனாளிகள் தேர்ந்தெடுக்கும் பணியினை ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் மட்டும் ஒப்படைக்காமல், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களுக்கும் போதிய அங்கம் வகிக்கப் வழி செய்யப்பட வேண்டும்.

திட்டப்பயனாளிகளை தேர்ந்தெடுக்கும் குழுக்களை கீழ்குறிப்பிட்டபடி அமைத்திட பரிந்துரை செய்யப்படுகிறது.

1. ஊராட்சி ஒன்றியத் தலைவர் (தலைவர்)
2. சம்மந்தப்பட்ட மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்
3. சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்
4. சம்மந்தப்பட்ட ஊராட்சித்தலைவர்
5. தொடர்புடைய துறை அலுவலர்
6. பகுதி வங்கி அலுவலர் / கடன் வழங்குதல் (திட்டங்களுக்கு மட்டும்)

இந்தக் குழு கிராமங்களுக்குத் நேரில் சென்று, கிராம சபா முன்னிலையில் தகுதி படைத்த பயனாளிகளை தேர்வு செய்வார்கள்.

இக்குழுவின் மூலம் அடியிற் குறிப்பிட்ட திட்டங்களில் பயனாளிகளை தேர்ந்தெடுக்கும் பணிநிலை ஒப்படைக்க அரசைக் கேட்டுக் கொள்ள பரிந்துரை செய்யப்படுகிறது

1. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (ஐ.ஆர்.டி.பி.)
2. ஊரக இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்பு பயிற்சித் திட்டம் (டிரைசம்).
3. மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் (டோக்ரா).
4. இந்திரா நினைவு குடியிருப்பு திட்டம் (ஐ.ஏ.ஒய்)
5. ஜீவன்தாரா கிணறுகள்.
6. தமிழ்நாடு ஆதிதிராவிடர் நல வாரியம் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் (தாட்கோ).
7. கதர் கிராமத் தொழில் வாரியம் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள்.
8. மாவட்ட தொழில் மையத்தின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள்.
9. பால்வளத் துறை மூலம் செயல்படும் திட்டங்கள்.
10. கால்நடைத் துறை மூலம் செயல்படுத்தும் திட்டங்கள்.
11. பட்டு வளர்ப்புத் துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள்.
12. விவசாயத்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள்.

மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், ஜீவன்தாரா கிணறுகள் ஆகிய திட்டங்களில் மாவட்ட ஊராட்சித் தலைவருக்கு மொத்த ஒதுக்கீட்டில் 15 சதவீதம் வரை பயனாளிகளை தேர்வு செய்ய தக்க ஆணை பிறப்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

11. மூன்றடுக்கு ஊராட்சி நிலைகளில் தேர்ந்தெடுக்கும் உறுப்பினர்கள் தனித்தனியாக தேர்ந்தெடுக்கப்படுவதால் உறுப்பினர்களை பொறுத்தவரை ஒன்றுக்கொன்று நேரடி தொடர்பற்ற நிலை உள்ளது. இருப்பினும் நிர்வாக ரீதியில் அடிப்படை வசதிகள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள் செயல்படுத்துவதில் மூன்று நிலைகளிலும் ஆழ்ந்த தொடர்பு உண்டு. ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி மற்றும் அவற்றில் பொது நிதிகளில் செயல்பட தேர்வு செய்யும் பணிகளில் மாவட்ட ஊராட்சி குறுக்கிடாது என்றாலும், திட்டங்கள் செயல்படுத்துவதை கண்காணிக்கும் பொறுப்பு மாவட்ட ஊராட்சிக்கு முழுமையாக இருக்க வேண்டும். இல்லையெனில், திட்டங்கள் செயல்படுத்துவதில் ஒருங்கிணைப்பு மற்றும் கூட்டு ஒத்துழைப்பு இருப்பதற்கு வாய்ப்பில்லை. எனவே, மாவட்ட ஊராட்சி ஒன்றியங்கள் / ஊராட்சிகளில் பணிகளை கண்காணித்து ஆய்வு செய்யத்தக்க ஆணை பிறப்பிக்க அரசினை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

12. மைய அரசின் பத்தாவது நிதிக்குழுவின் பரிந்துரைக்கு பின்னர் மான்யத் தொகை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 1 கோடி ரூபாய் தமிழக அரசு ஆணை (நிலை) எண்.227, ஊரக வளர்ச்சித்துறை, நாள் : 15–10–96ல் வழங்கியுள்ளது. உள்ளாட்சி அமைப்புகளின் நிதிநிலைமை ஆராய்ந்து அவைகளுக்கு போதிய நிதி ஆதாரத்தை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட மாநில நிதி ஆணையம் 29–11–96 அன்று மேதகு ஆளுநர் அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளது. மேற்கூறிய தீர்மானங்களில் அடங்கியுள்ள பொறுப்புகளை முழுமையாகவும், செம்மையாகவும் ஏற்று செயல்படுத்த சராசரி ரூ.10 கோடி ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக்கும் மிகவும் இன்றியமையாதது. எனவே, ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக்கும் கட்டுப் படுத்தப்படாத நிதியாக (அன்டைய்டு பண்ட்ஸ்) ஆண்டுக்கு சராசரி 10 கோடி ரூபாய் விரைவில் வழங்க தமிழக அரசை கேட்டுக் கொள்கின்றோம்.

13. மாவட்ட ஊராட்சிகளை அமைக்கும் போது அரசு, ஊரக வளர்ச்சி முகமையில் திட்ட அலுவலர்களை முதன்மை செயல் அலுவலராக (சி.இ.ஒ.) கூடுதல் பொறுப்பு வகிக்கவும், ஆறு மாதங்களுக்குப் பின் இதனை ஆய்வு செய்து தக்க ஆணை பிறப்பிக்கப்படும் என உத்திரவிட்டுள்ளது. தற்போது மாவட்ட ஊராட்சிகளில் தேர்ந்தெடுத்த அமைப்பு பொறுப்பு ஏற்றுள்ளதாலும், ஆரம்ப கூட்டத்தில் பல முக்கிய அலுவலக ரீதியான பணிகள் இருப்பதாலும், இதற்கு முழுநேர முதன் செயல் அலுவலராக பணியாற்ற ஒரு அலுவலரை அரசு உடனடியாக நியமிக்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறது.

14. மாவட்ட ஊராட்சித் தலைவர்களுக்கு, இராஜங்க அமைச்சர்களுக்குண்டான (மினிஸ்டர் ஆப் ஸ்டேட்) அந்தஸ்து தரப்பட வேண்டும்.

15. மாவட்ட ஊராட்சி சிறப்பாக செயல்பட தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு சில அவசியத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

தொகுப்பூதியம் (உறானரோரியம்) மற்றும் டி.ஏ. , டீ.ஏ. ஆகியவை அண்டை மாநிலங்களில் ஊராட்சி தலைவருக்கும், உறுப்பினர்களுக்கும் வழங்கப்படுவதைப் போன்று வழங்க வேண்டும்.

மாவட்ட ஊராட்சித் தலைவருக்கு (அண்டை மாநிலங்களில் உள்ளது போல்) மாவட்ட தலைமையிடத்தில் தங்க வாடகையில்லாத ஒரு வீட்டு வசதி (மாதத்திற்கு ரூ. 5,000/- க்கு மிகையாகமல்) செய்து தரப்படவேண்டும். அல்லது பொருத்தமான அரசு குடியிருப்பு இருந்தால் அதனை ஒதுக்கீடு செய்து தர வேண்டும்.

மாவட்ட ஊராட்சித்தலைவர், மாவட்ட முழுமையும் விரிவான பயணம் செய்ய வேண்டி உள்ளதால், அவருக்கு ஒரு தனியாக கார் எரிபொருள் வரம்பு இன்றி வழங்கப்பட வேண்டும்.

மேலும், அலுவலக உபயோகத்திற்கும், கார் செல்ல முடியாத இடங்களுக்கு செல்லவும் ஒரு ஜீப்பு வழங்க வேண்டும்

மாவட்ட ஊராட்சித் தலைவருக்கு ஒரு நேர் முக எழுத்தரும் (ஸ்டெனோ) ஒரு அலுவலக உதவியாளரும் (டபேதகர்) வழங்கப்பட வேண்டும்.

16) இதுவரை குறிப்பிட்டுள்ள மாவட்ட ஊராட்சிகளின் பொறுப்புகளை சீரிய முறையில் செயல்படுத்த உரிய நிர்வாக அமைப்புகள் அவசியமாகிறது. அதனை உடனடியாக ஏற்படுத்தி தர அரசினை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இதுவரை குறிப்பிட்டுள்ள பணிகள் அனைத்தும் மாவட்ட ஊராட்சிகள் முதற் கட்டமாக செயல்படுத்த தேவையானவை. மேலும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலும் அட்டவணை – 11 –ல் கண்டுள்ள மீதமுள்ள பணிகளையும் படிப்படியாக அடுத்த 6 மாதங்களில் ஒப்படை செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது.

உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகம் மற்றும் சட்ட சிக்கல்களை ஆராய்வதற்காக ஒவ்வொரு ஆண்டும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இதே போன்ற உள்ளாட்சி அமைப்புகளில் தலைவர்களில் கருத்தரங்கினை கூட்ட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

உள்ளாட்சி அமைப்புகளில் மாவட்ட ஊராட்சி புதிய அமைப்பாக உள்ளதாலும், பல்வேறு நிர்வாக சிக்கல்களை களைவதற்காகவும், அவைகள் சிறப்பாக செயல்படவும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் ஆறு மாதத்திற்கு ஒரு முறையாவது மாவட்டஊராட்சி தலைவர்களில் கூட்டத்தை கூட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம்.